1995 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

பம்பாய் நகருக்குள் பிறமாநிலத்தவர்கள் நுழைய அனுமதிசீட்டு வழங்கப் போவதாக வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பம்பாயில் வாழ்கிற தமிழர்கள் உட்பட பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் பம்பாய் நகருக்குள் நுழைவதைத் தடைசெய்கிற வகையில் அனுமதிச் சீட்டு வழங்கப் போவதாக ஒரு அறிவிப்பை மகாராஷ்டிரா மாநில அரசு விடுத்திருப்பதாகக் கூறி, அதன் காரணமாக எழுந்துள்ள நிலையை விவாதிக்க வேண்டுமென்று பேரவை விதி 56—ன் கீழ் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் என்னிடத்தில் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அது இன்னொரு மாநிலப் பிரச்சினையை உள்ளடக்கியதாக இருக்கிற காரணத்தால் அதை ஒத்திவைப்புப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு விவாதிப்பது அவ்வளவு நல்லதாக இருக்காது என்று கருதி அது குறித்து சிறப்புக்கவன ஈர்ப்பாக எழுப்ப இப்போது அனுமதிக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், திரு. பரிதி இளம்வழுதி, திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி ஆகியோர் இந்த அறிவிப்பைக் கொடுத்தவர்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

முற்பகல் 11-25

***திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாராஷ்டிரா மாநிலத்தினுடைய முதலமைச்சர் திரு. மனோகர் ஜோஷி அவர்கள் பம்பாய் நகருக்குள்ளே நுழைவதற்கு இனிமேல் முன்னனுமதி பெறவேண்டும், ‘என்டரி பெரிமிட்’ பெறவேண்டும் என்பதைப் போல ஒரு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள்.

பம்பாய் நகரத்தில் ஜனப்பெருக்கம் அதிகரித்து வருவதாகவும், அதைக் கட்டுப்படுத்துவது அவசியமாகிறது என்றும் சொல்லி, இனிமேல்

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [*1995 மார்ச் 28*

வருவதற்கு முன்அனுமதி பெறவேண்டும் என்று அறிவிப்பு கொடுத்து இருக்கிறார்கள். பம்பாய் நகரம் இன்று மகாராஷ்டிரா மாநிலத்தினுடைய தலைநகரமாக மட்டுமல்ல, இந்தியாவினுடைய பொருளாதாரத் தலைநகரமாகவும் விளங்குகிறது. உலகத்தினுடைய மிகப் பெரிய நகரங்களிலே ஒன்றாக விளங்குகின்ற பம்பாய் நகரம், ஆங்கிலேயே அரசனுக்கு சீதனமாக வழங்கப்பட்ட பகுதியாகும். அது சீதனமாக வந்தபோது, அங்கே இருந்தது எல்லாம் மணலும், கல்லும், முட்புதர்களும் மட்டுமே. இன்றையதினம் அந்தப் பகுதி மாற்றியமைக்கப்பட்டு, அழகிய நகரமாக, மாநகரமாக, பெரிய நகரமாக மாற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதிலே பலருடைய உழைப்பும் இருக்கிறது. பல மாநிலங்களைச் சேர்ந்தவர்களுடைய உழைப்பு இருக்கிறது. பல மொழி பேசுபவர்களுடைய உழைப்பு அங்கே இருக்கிறது. குறிப்பாகச் சொல்லவேண்டும் என்று சொன்னால், தமிழர்களுடைய உழைப்பு நிறைய இருக்கிறது. இன்றும் தமிழர்கள், லட்சக்கணக்கிலே பம்பாயில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுடைய பாதுகாப்பு ஒரு பெரிய பிரச்சினையாக இன்றையதினம் இருக்கிறது. யாரையும் வராதே என்று சொல்கின்ற உரிமை எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இருக்க முடியாது. அங்கே மாநில உணர்வுகள், பிராந்திய வெறி அனுமதிக்கப்பட முடியாத ஒன்று. குறுகிய மனோபாவம் கொண்டவர்கள் ஆட்சிப் பீடம் ஏறுகின்ற நேரத்தில் தேசத்தின் நலனைப் பற்றி கவலைப்படாமல், இதுபோன்ற அறிவிப்புக்கள் கொடுப்பதை நிச்சயமாக யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். யாருக்கும் அநீதி இழைக்கப்படக்கூடாது. 'Freedom of movement of all citizens within the country can under no circumstances be barred,' என்று தெளிவாக நம்முடைய அரச்மைப்புச் சட்டம் சொல்கிறது. இந்தப் பிரச்சினையில் நமக்கு அக்கறை இருக்கிறது. நம்மைப் போலவே பல மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கும் அக்கறை இருக்கிறது. இந்தப் பிரச்சினை ஏற்கனவே பார்லியமெண்டிலே எழுப்பப்பட்டிருக்கிறது. கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த முதலமைச்சர் தேவ கௌடா அவர்கள் மராட்டிய மாநில முதலமைச்சர் அவர்களோடு ஏற்கனவே தொடர்பு கொண்டு பேசியிருக்கிறார்கள். தமிழர்களுடைய பாதுகாப்பு என்பது ஒரு பெரிய பிரச்சினை. எனவே, நம் முதல்வர் அவர்கள் இதிலே முன் நின்று, நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் எடுக்கின்ற நடவடிக்கை, தமிழர்களுடைய பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பதாகவும், தமிழர்கள் தாராளமாக அங்கே சென்று இருக்கவும், அங்கே தொழில் செய்யவும், அனைத்திற்கும் பாதுகாப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகின்ற தன்மையிலே அமையவேண்டும். அவர்கள் எடுக்கின்ற

1995 மார்ச் 28] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

அனைத்து நடவடிக்கைகளுக்கும் எங்களுடைய முழுமையான ஆதரவும் ஒத்துழைப்பும் உண்டு என்று சொல்லி, நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பரிதி இளம் வழுதி.

திரு. பரிதி இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை மிகவும் சிக்கலான ஒரு பிரச்சினை. கயிற்றின் மேல் நடப்பதைப் போல மிக ஜாக்கிரதையாக அணுகவேண்டும் என்ற காரணத்தாலே, — நாம் இங்கே எடுத்து வைக்கின்ற கருத்துக்களோ, அல்லது நாம் எடுக்கின்ற நடவடிக்கைகளோ, ஒரு பொறி கிளம்பினாலே, அது காட்டுத் தீயாக உருவெடுத்து பெரும் அழிவை உண்டாக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், — நான் மிக ஜாக்கிரதையாக என்னுடைய கருத்துக்களை இங்கே வைக்க விரும்புகிறேன்.

நோபல் பரிசு பெற்ற வங்கத்துக் கவிஞன் ரவீந்திரநாத் தாகூர் அவர்கள், தான் எழுதிய தேசியகீதத்திலே, 'பஞ்சாப சிந்து குஜராட மராட்டா திராவிட உத்கல வங்கா' என்று எழுதினார். 'பஞ்சாப சிந்து, குஜராட, மராட்டா திராவிட உத்கல வங்கா' எப்போதும் ஒன்றாக இருக்கவேண்டும் என்ற அடிப்படையிலேதான், இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டிலே நம்பிக்கை இருக்கின்ற அடிப்படையிலேதான், இந்தியா ஒன்றாக இருக்கவேண்டும் என்கிற அடிப்படையிலேதான், பேரறிஞர் அண்ணா அவர்கள், 'திராவிட நாடு திராவிடர்க்கே' என்ற கோரிக்கையை 1962—ஆம் ஆண்டு, அந்தப் பிரிவினைக் கோரிக்கையை கைவிட்டார்கள். எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூட, அடிக்கடி குறிப்பிடுகின்றபோது, 'நாட்டால் இந்தியன், மொழியால் தமிழன், உலகத்தால் மனிதன்' என்கிற உயரிய கருத்துக்களை இன்றைக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துவக்கத்திலே, இது இன்னொரு மாநிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்பதால் எவ்வளவு ஜாக்கிரதையாக என் கருத்தைச் சொல்கிறேன் என்பதை பீடிகையோடு சொல்லித்தான் நான் ஆரம்பித்தேன். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்கிற உயரிய தத்துவத்தை உலகத்திற்கே தந்த பாராண்ட தமிழன். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பம்பாய் மாநகரம் வெள்ளைக்காரன் ஆட்சியிலே சீதனமாகக் கொடுக்கப்பட்டபோது, மணலும் கல்லும், கட்டாந்தரையுமாக இருந்தது என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு எழில் குலுங்குகிற ஒரு பெரிய நகரமாக, இன்னும் சொல்ல வேண்டுமானால், இந்தியாவின்

[திரு. இளம்வழுதி] [*1995 மார்ச் 28*

மிகப் பெரிய வர்த்தகத் தலைநகரமாக விளங்குகிறது என்றால், அதற்கு அடிப்படையான காரணம் தமிழர்கள்தான். பம்பாயில் மட்டுமல்ல. அவர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும், அவர்கள் அந்தமான் நிகோபாரில் வாழ்ந்தாலும், வேறு எந்த நாட்டில் வாழ்ந்தாலும் சரி, அந்த நாட்டினுடைய முன்னேற்றத்திற்கும், வளமையான செழுமைக்கும், தங்களுடைய உதிரத்தை காணிக்கையாக்கி உழைப்பவர்கள். எனவே அப்படிப்பட்ட தமிழர்களுக்கு இன்றைக்கு அங்கே பாதுகாப்பற்ற தன்மை உருவாக்கப்பட்டிருக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. பம்பாயிலிருந்து அடிக்கடி எனக்கு தொலைபேசி மூலமாக அங்கே இருக்கின்றவர்களிடமிருந்து செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. மாதுங்காவில் தமிழர்கள் வாழ்கிறார்கள். தாராவியில் வாழ்கிறார்கள். செம்பூரில் வாழ்கிறார்கள். அங்கேயிருந்து தொலைபேசியில் சொல்கிறார்கள், எங்களுக்கு அச்சமாக இருக்கிறதென்று. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், எண்ணிப்பாருங்கள் நான் ஆரம்பத்திலே சொன்னேன். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றுகூட நான் முதலிலே குறிப்பிட்டேன். அந்த அடிப்படையிலே தமிழ்நாட்டிலே இன்றைக்கு பன்னெடுங்காலமாக உள்ள சவுகார்பேட்டையை எடுத்துக்கொள்ளுங்கள். வட நாட்டைச் சார்ந்தவர்கள் நம்முடைய சகோதரர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசுத் துறையிலே பல்வேறு அதிகாரிகள் வடநாட்டைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். கலைத் துறையை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கேயிருந்து வந்த ரஜினிகாந்த் இன்றைக்கு சூப்பர்ஸ்டாராகத் திகழ்ந்துகொண்டிருக்கிறார். அங்கேயிருந்து வந்த குஷ்பு கொடிகட்டிப் பறக்கிறார். அங்கேயிருந்து வந்த நக்மா இன்றைக்குக் கொடிகட்டிப் பறந்துகொண்டிருக்கிறார். இவர்கள் எல்லாம் . . . . (குறுக்கீடு)

முற்பகல் *11-30*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரொம்ப சீரியசான பிரச்சினை இது. வெளியிலே போகிறபோது இது ஏதோ விளையாட்டாக எடுத்துக் கொண்டார்கள் என்று இன்னொருவர் நினைக்கக்கூடாது.

திரு. இளம்வழுதி : அந்த அளவிற்கு அவர்களோடு நாம் சகோதரர்களாக பழகிக் கொண்டிருக்கிறோம். எந்தப் பிரச்சினையும் இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே நம்முடைய சென்னை தலைநகரிலே கூட என்.எஸ்.சி. போஸ், வங்கத்து சிங்கம் நேதாஜி சுபாஷ் சந்திரபோசுக்கு இங்கே ரோடு வைத்திருக்கிறோம். மதுரையில் சிலைகூட வைத்திருக்கிறோம். அந்த அளவுக்கு பரந்த தேசிய அளவிலே ஒருமைப்பாட்டை உண்மையிலே காக்கக் கூடியவர்களாக

1995 மார்ச் 28] [திரு. இளம் வழுதி]

நாம் திகழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் இன்றைக்கு பம்பாயில் அண்மையில் புதியதாக பொறுப்பேற்றிருக்கிற அந்த மாநிலத்து முதல்வர் விடுத்திருக்கிற செய்தியைப் பார்க்கின்றபோது இந்தியாவின் இறையாண்மையிலும், இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டிலும், இந்தியாவினுடைய அரசியல் சட்டத்திலே வழங்கியிருக்கிற அடிப்படை உரிமையிலும், கை வைப்பதைப் போல இருக்கிறது. அவர்கள் சொல்கின்ற காரணம், பிற நாட்டவர்கள், வெளி நாட்டவர்கள் இங்கே வருவதைத் தடுப்பதற்காக என்று சொல்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்கிறோம். வெளிநாட்டவர் இங்கே வருவதைத் தடுப்பதற்கு அவர்கள் சட்டவிரோதமான காரியத்தில் ஈடுபட்டால் அதைத் தடுப்பதற்கு பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் இந்தியாவிலே இருக்கின்ற ஒரு மாநிலத்திலே இருப்பவர்கள் இன்னொரு மாநிலத்திற்குச் செல்லக்கூடாது என்று அந்த மாநிலத்திலே இருக்கின்றவர்கள் சொல்வது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது. இப்படி ஒரு சூழ்நிலையில் அந்த மாநிலத்தவர் அப்படி சொல்வார்களேயானால், இந்தியாவினுடைய ஒருமைப்பாடு கேள்விக்குறியாகிவிடும்.

நேற்றைக்கு பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். சிவசேனா கட்சியினுடைய தலைவர் பால் தாக்கரே அவர்கள் காங்கிரஸ் அல்லாத மாநில முதல்வர்களுக்கு கடிதம் எழுதி, அது தொடர்பாக அவர்களோடு ஆலோசிக்கப் போகிறோம் என்று பத்திரிகையிலே செய்து வந்திருக்கிறது. நான் இந்தப் பிரச்சினையில் கட்சி மாச்சரியங்களையெல்லாம் மறந்துவிட்டு, முதலமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ள விரும்புவது, நம்முடைய உணர்வுகளை அவர்களிடம் வெளிப்படுத்துகின்ற வகையிலே, அங்கே வாழ்கின்ற லட்சக்கணக்கான தமிழர்களுடைய அச்சத்தைப் போக்குகின்ற வகையிலே நீங்கள் ஒரு நல்ல முடிவினை எடுத்து அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கக் கூடிய ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்கவேண்டும். ஏனென்றால் இன்னொரு மாநிலப் பிரச்சினை என்பதால் நான் ஜாக்கிரதையாகப் பேசுகிறேன். இந்த மன்றத்திலே நீங்கள் அதற்காக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அவர்களுக்கு அனுப்பினால் கூட நல்லது. எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டதைப் போல, நீங்கள் எடுக்கின்ற அனைத்து முடிவுகளுக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் உங்களோடு துணை நிற்கும் என்றுகூறி அமர்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக்கனி வேண்டாம். இது அடுத்த மாநிலப் பிரச்சினை. விளையாட்டாகப் பேசிவீடாதீர்கள், வேண்டாம். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதல்வரவர்கள்.

(குறுக்கீடு) கட்சிகளுக்குத்தான் வாய்ப்புக்கொடுக்கிறோம். தனிப்பட்ட பிரச்சினை, தொகுதிப் பிரச்சினை, மாவட்டப் பிரச்சினை என்று வரும்போது நான் உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) தாமரைக்கனி ரொம்ப சுருக்கமாக உங்களுடைய வேண்டுகோளை மட்டும் வையுங்கள்.

***திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே *25* மாநிலங்கள் இருக்கின்றன. *25* மாநிலங்களிலும் தமிழர்கள் வாழ்கிறார்கள். இந்தியாவின் நுழைவு வாயிலே பம்பாய். பம்பாயில் நுழையக்கூடாது என்றும் மராட்டிய மாநில அரசு பர்மிட், உத்தரவு வழங்கித்தான் அங்கே நுழையவேண்டும் என்றும் சொல்கிறார்கள். அங்கேயுள்ள தமிழர்களுடைய உடமைக்கும், உயிருக்கும் ஆபத்தான சூழ்நிலை இருக்கிறது. அதனாலேதான் முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு செல்கிறேன். நமது தமிழக முதல்வரவர்கள் காவிரி நீர்ப் பிரச்சினை ஏற்பட்டபோது, உண்ணாவிரதம் இருந்தபோது இங்கே தமிழ்நாட்டிலுள்ள மராட்டிய சிறுபான்மை மைனாரிட்டி மக்களுக்கு எவ்வளவு தூரம் பாதுகாப்பு இருந்ததோ, அதுமாதிரியான பாதுகாப்பை மராட்டிய மாநிலத்து முதலமைச்சர் எடுக்கவேண்டும். அப்படி எடுப்பதை விட்டுவிட்டு, இப்படி அறிவிப்பது என்பது மிகவும் வேதனையாக இருக்கிறது.

பாரதப்பிரதமர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பது தெரியவில்லை. மாநிலத்தில் உள்ள சட்டசபை உறுப்பினர்களும், முதலமைச்சரும் இவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுக்கும்போது, அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பது தெரியவில்லை. ஆகவே, இன்னும் ஒரே ஒரு வார்த்தை. ஆகவே **விட**இந்தச் சட்டசபையின் மூலமாக இயற்றி மத்திய சர்க்காருக்கு அனுப்பிடவேண்டும். இல்லாவிட்டால் நமது தேசிய ஒற்றுமை பலனற்றதாகப் போய்விடும். சோவியத் நாடு போன்று இந்தியா சுக்கு நூறாகச் சிதறி விடும் என்று எச்சரிக்கை விடுத்து முதலமைச்சரும், பாரதப்பிரதமரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **என்பது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1995 மார்ச் 28]

***மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தின் மிக முக்கியமான நகரங்களில் ஒன்றான பம்பாயில், மக்கள் தொகை பெருகி வருவதைத் தடுப்பதற்காக, புதியவர்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்க வேண்டும் என்றும், அதுவரை புதியதாக ரேஷன் கார்டுகள் வழங்கக் கூடாது என்றும், மஹாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த, ஒரு அரசியல் கட்சித் தலைவர் குறிப்பிட்டதாகத் தெரிகிறது. இதைத் தொடர்ந்து, பல்வேறு விதமான முரண்பட்ட, ஆதாரப்பூர்வமில்லாத செய்திகள், செய்தித் தாள்களில் சில நாட்களாக வெளிவந்துள்ளன.

தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள், இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அது போலவே, இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் தமிழ்நாட்டில் அமைதியான முறையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு வேளை இதர மாநிலங்களில் வசிக்கின்ற தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு, ஏதேனும் இன்னல்கள் ஏற்பட்டு விடுமோ என்கின்ற ஒரு ஆதங்கத்தில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் உட்பட, சில சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த விஷயம் குறித்து இந்தப் பேரவையில் விவாதிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்கள். கடந்த சில நாட்களாக, செய்தித் தாள்களில் பலவிதமான முரண்பாடு உடைய கருத்துக்கள் வெளி வந்துள்ளன. மேலும் இந்தப் பிரச்சினை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் விவாதிக்கப்பட்டதாகச் செய்தித் தாள்களின் வழியே அறிய முடிகின்றது.

இது குறித்து மகாராஷ்டிரா மாநிலத்தின் மாண்புமிகு முதலமைச்சர் திரு. மனோஹர் ஜோஷி அவர்கள், மற்ற மாநிலத்தவர்கள் பம்பாய்க்கு வருவதையோ அல்லது மகாராஷ்டிரா மாநிலத்திற்கு வருவதையோ தடை செய்கின்ற எண்ணமோ அல்லது பம்பாய் பெருநகரத்திற்குள் செல்ல அனுமதிச்சீட்டு வழங்குகின்ற எண்ணமோ இல்லை என்பதைத் தெளிவுபடக் கூறியதாக சில செய்தித் தாள்களில், செய்திகள் வெளி வந்துள்ளன. மாநிலங்கள் அவையிலும் இது தொடர்பாக விவாதிக்கப்பட்டு உள்ளது. நாடாளுமன்றத்தின் மக்கள் அவையிலும், இது குறித்து விவாதம் நடைபெற்றபோது நாடாளுமன்றத்தின் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. வாஜ்பாய் அவர்களே, இந்தச் செய்தி தவறானது என்பதைச் சுட்டிக்காட்டியதாகவும், மாண்புமிகு மக்களவையின் பேரவைத் தலைவர், திரு. சிவராஜ் பாட்டீல் அவர்கள் எந்த ஆதாரத்தின் அடிப்படையில் இத்தகைய புகார்கள்

அந்த அவையில் வைக்கப்பட்டன என்று கேட்டதாகவும் செய்தித் தாள்களில் செய்திகள் வெளி வந்துள்ளன.

இது குறித்து தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள், மகாராஷ்டிரா மாநில அரசின் தலைமைச் செயலாளருடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். மகாராஷ்டிரா மாநில அரசு இதுபோன்ற எந்த ஒரு ஆணையையும் பிறப்பிக்கவில்லை என்று தெரிவித்துள்ளது. மகாராஷ்டிரா மாநிலத்தில் பாஸ்போர்ட் இல்லாமலும், அல்லது பாஸ்போர்ட் காலாவதியாகியும் தொடர்ந்து மகாராஷ்டிரா மாநிலத்தில் தங்கியிருக்கின்ற பாகிஸ்தான் மற்றும் பங்களா தேஷ் நாடுகளைச் சேர்ந்தவர்களையும் 'I.S.I.' என்ற சர்வதேச பயங்கரவாத இயக்கத்தின் உளவாளிகளுடன் தொடர்பு கொண்டவர்கள் என்று கருதப்படுகின்றவர்களையும் உடனடியாக மகாராஷ்டிரா மாநிலத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று, அந்த மாநிலத்தின் காவல் துறைக்கு ஆணை வழங்கப்பட்டு இருப்பதாக மட்டும் தெரிகிறது. ஆனால் மகாராஷ்டிரா மாநிலத்தில் வேறு மாநிலத்தவர்கள் வசிக்கக்கூடாது என்று தடை செய்யும் ஆணை எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது.

முற்பகல் 11-40

இந்தியாவைப் பொறுத்தவரை, பூகோள ரீதியாகவும், நடையுடை உணவு பழக்க வழக்கங்கள் ரீதியாகவும், மாறுபட்ட மக்கள் வாழ்ந்து வந்தாலும், நாம் அனைவரும் இந்தியர்கள் என்ற ஒரு ஒருமைப்பாட்டு உணர்வு எப்போதும் நமக்கு உண்டு. வேற்றுமையில் ஒற்றுமை, அதாவது Unity in Diversity காணுகின்ற ஒரு மாபெரும் நாடு நமது இந்தியத் துணைக் கண்டம் ஆகும். இந்தியத் துணைக் கண்டத்தில் வாழ்பவர்கள் அனைவரும் சமம் என்பதும்; இந்தியாவின் எந்த ஒரு பகுதியில் வசித்தாலும், வேறு பகுதிகளுக்கு சுதந்திரமாகச் சென்று வரவும், வசிக்கவும், தொழில் செய்யவும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இது இந்தியர்கள் அனைவருக்கும் பாரபட்சம் இன்றி, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு இருக்கின்ற, ஒரு அடிப்படை உரிமை — Fundamental Right - ஆகும்.

இந்தியாவின் ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மை ஆகியவற்றை மதிப்பவர்கள் எவரும் இந்த அடிப்படை உரிமையை மீற மாட்டார்கள். நாம் அனைவரும் இந்தியர்கள். மொழி, இனம் மற்றும் மதத்தால்

வேறுபட்டாலும் ஒரே நாட்டில் வாழ்கின்ற சகோதர சகோதரிகள் என்கின்ற உணர்வை, அனைத்திந்திய அளவில் நாங்கள் என்றும், எப்போதும் வலியுறுத்தி வருகிறோம். கருத்து வேறுபாடுகள், அரசியல் மனமாச்சரியங்கள் இருந்தாலும் அவை எந்த ஒரு காலக்கட்டத்திலும் நமது நாட்டின் ஒருமைப்பாட்டையும், இறையாண்மையையும் குலைக்கின்ற அளவிற்கு சென்று விடக்கூடாது என்பதிலும், நாங்கள் தீவிரமாக உள்ளோம். அந்த அடிப்படையில்தான், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, எந்த ஒரு மாநிலத்தவரும், அடுத்த மாநிலத்தவர்கள் தங்களது மாநிலத்தில் வந்து தங்கக் கூடாது என்று, சட்டத்திற்குப் புறம்பாக தடுக்கக் கூடாது என்பதை வற்புறுத்தி வருகின்றோம். அவ்வாறு தடுப்பது இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பான செயல் ஆகும். Such an act is illegal as well as un-constitutional, மகாராஷ்டிரா மாநில அரசு, இதுபோன்று எந்த ஒரு ஆணையையும் பிறப்பிக்கவில்லை என்று கூறுகின்ற ஒரு சூழ்நிலையில், தேவையற்ற அச்சங்களையும், தேவையற்ற மன வேறுபாடுகளையும், பல்வேறு மாநிலங்களில் வசிக்கும் மக்களிடையே ஏற்படுத்துவது என்பது நமது ஒருமைப்பாட்டைக் குலைக்கின்ற ஒரு முயற்சியாக மாறிவிடும் என்று அஞ்சுகிறேன். அத்தகைய ஒரு தேவையற்ற அச்சமும் சந்தேகமும் அமைதியான இந்திய மக்களிடையே வேறுபாடுகளை விளைவித்துவிடும். சமூக விரோத சக்திகளுக்கு, நாம் வழிவிட்டதாகவும் ஆகிவிடும். எனவே, இந்தப் பிரச்சினையை உணர்ச்சிப்பூர்வமாக மட்டும் அணுகக் கூடாது என்று அறிவுறுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

'The only thing we have to fear is fear itself' என்று Franklin D. Roosevelt கூறியது இந்த நேரத்தில் என் நினைவிற்கு வருகின்றது. இல்லாத ஒன்று இருப்பதாக பாமர மக்கள் மத்தியில் கருத்து பரவினால் அதனால் எண்ணிலடங்கா தீமைகள் உண்டாகும் என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம்.

அரசியலில் கருத்து வேறுபாடுகளும், மனமாச்சரியங்களும் இருப்பது சகஜம்தான். சில முக்கியமான பிரச்சினைகளை எடுத்து இந்த அவையில் விவாதிக்க நினைப்பது நியாயம்தான். ஆனால் இல்லாத ஒரு பிரச்சினையை நாம் பூதாகரமாக்கி இந்த அவையில் விவாதிப்பதால் மக்களிடையே தேவையற்ற பயம் ஏற்படும் என்பதையும் அதன் விளைவாகத் தேவையற்ற சில வன்முறைகள் நிகழ நாமே வழி வகுத்தது போல் ஆகிவிடும் என்பதையும் எடுத்துரைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்திய ஒருமைப்பாட்டை மனதில் நிலைநிறுத்தி இதுபோன்ற தேவையற்ற பிரச்சினைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏதோ சில செய்தித் தாள்கள் பொறுப்பற்ற முறையிலும் ஹேஷ்யத்தின் அடிப்படையிலும் செய்திகளை வெளியிட்டு இருப்பதால் இந்தப் பிரச்சினை பெரிதுபடுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது. இல்லாத ஒன்றை இருப்பதாக நினைத்துக் கொண்டு நிழல் போல் நடத்துவது தேவையற்றது என்பது எனது திண்ணமான கருத்து. விவரங்களை விவகாரமாக்கி அதில் அரசியல் ஆதாயம் தேடுகின்ற ஒரு மலிவான செயலுக்கு யாரும் துணை போகக் கூடாது என்று மீண்டும் ஒருமுறை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன். இந்தியாவின் ஒட்டுமொத்த ஒருமைப்பாட்டையும், இறையாண்மையையும் பாதுகாப்பதில் தமிழக மக்கள் மற்றவர்களுக்கு சளைத்தவர்கள் அல்ல என்பதை மீண்டும் உலகிற்கு ஒருமுறை வெளிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மகாராஷ்டிரா மாநில முதலமைச்சர் அவர்களே, மற்ற மாநிலத்தவர்கள், மகாராஷ்டிரா மாநிலத்திற்குள் நுழையும் உரிமையை பறிக்கும் எண்ணம் இல்லை என்று கூறியிருப்பதாகச் செய்தித்தாள்களில் செய்தி வெளி வந்திள்ளதாலும் தமிழக அரசு விசாரித்த வரையில் இதுபோன்ற எந்த ஒரு தடை ஆணையும் மகாராஷ்டிரா மாநில அரசால் வழங்கப்படவில்லை என்பதையும் கருத்தில்கொண்டு இந்த விஷயம் குறித்து மேலும் இந்த அவையில் விவாதிக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரம், தமிழக மக்கள் எங்கு வாழ்ந்தாலும், அவர்களின் நலன் காக்க இந்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க (மேசையைத் தட்டும் ஒலி) எப்போதும் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினையை இத்தோடு முடிவுக்குக் கொண்டு வருவது நல்லது.